தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# கோவில் காடுகளை பாதுகாப்பது அவசியம்!

கோவையில், இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில், முதுநிலை முதன்மை விஞ்ஞானியாக பணியாற்றி வரும் டாக்டர் கண்ணன் வாரியர், சுற்றுச்சூழல் தகவல் மையத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் உள்ளார். கோவில் காடுகள், அவற்றின் உயிர் பல்வகைமை குறித்து மேற்கொண்ட ஆராய்ச்சிக்காக, ரோலா ராவ் விருது பெற்றவர். அவரது பேட்டியில் இருந்து...!

## இன்று இவர்

கண்ணன் வாரியர், முதன்மை விஞ்ஞானி
இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம்.



**கோவில் காடுகள் என்பவை என்ன? அவை எங்குள்ளன?**

மத நம்பிக்கை அடிப்படையில், பாதுகாக்கப்பட்ட பூர்வீக தாவரங்கள் உள்ள இடங்களே கோவில் காடுகள். இந்தியாவில் ஒன்றரை லட்சம் இடங்களில், கோவில் காடுகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே இவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 448 கோவில் காடுகளும், கேரளாவில் 761 கோவில் காடுகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை, தமிழகத்தில் கோவில் காடுகள் என்றும், கேரளாவில் 'காவு' என்றும், கர்நாடகாவில் 'தேவார காடு' என்றும், அசாமில் 'தான்' என்றும், வெவ்வேறு மாநிலங்களில், வெவ்வேறு பெயர்களில் அறியப்படுகின்றன.

**கோவில் காடுகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் என்ன?**

கோவில் காடுகளில், உயிரின பல்வகைமை மிகுந்து காணப்படுகிறது. இங்குள்ள தாவரங்கள், அரிய வகையை சேர்ந்தவை. அழிவின் விளிம்பில் இருப்பவை. மருத்துவ குணங்கள் மிகுந்திருப்பவை. இந்த தாவரங்கள் அனைத்தும், பயிர் செய்யப்பட்ட தாவரங்களின் மூதாதையர்களான காட்டு உறவினர்கள். எதிர்காலத்தில் தாவர மேம்பாட்டு திட்டங்களுக்கு, இத்தகைய கோவில் காடுகள் பெரும் பயனுள்ளதாக இருக்கும்.

**கோவில் காடுகள் அழிவுக்கு என்ன காரணம்?**

சமூக பொருளாதார மாற்றங்கள், அதிகரிக்கும் மக்கள் தொகை, கிராமங்களில் ஏற்படும் வளர்ச்சி போன்ற காரணங்களால், கோவில் காடுகள் பாதுகாப்பற்ற நிலையை அடைந்துவிட்டன. பல இடங்களில், கோவில் கட்டுவதற்காகவும், கோவில் காடுகள் அழிக்கப்படுகின்றன.

இது மட்டுமின்றி, சுவாமி சிலைகள் செய்வதற்காகவும், ஆன்மிக சடங்குகள், பூஜைகள் செய்வதற்காகவும் பயன்படுத்தப்படுவதால், கோவில் காடுகள் அழிந்து வருகின்றன.

**எந்த வகையில் கோவில் காடுகளை பாதுகாக்க முடியும்?**

தேசிய சுற்றுச்சூழல் கொள்கை 2006ன்படி, பண்டைய கோவில் காடுகள், ஒப்பிட முடியாத மதிப்பு கொண்டதாக கருதப்பட வேண்டும்.

தாஜ் மகால் போன்ற முக்கிய நினைவுச்சின்னங்களை பாதுகாப்பது போல், கடுமையான விதிமுறைகளை ஏற்படுத்தி, கோவில் காடுகளையும் பாதுகாக்க வேண்டும்.

108. News in Dinamalar, 27.11.2020, Coimbatore, Conservation of Sacred Groves.